**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (முகுனு)**
**நிலையான வைப்பை பிணையாக வைத்து வழங்கப்படும் கடன்**
**மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

(Merchant Bank of Sri Lanka & Finance PLC)

**முக்கிய அம்சங்கள் மற்றும் நன்மைகள்**

**நிதி வசதி:** கேஷ் பேக் கடன் வசதி – எந்தவொரு நிலையான வைப்புத் தொகையையும் அடமானமாக வைத்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய கடன் வசதியாகும்.

**தகுதி:** எந்தவொரு நிலையான வைப்பினைக் கொண்டவர்கள்

**1. நிதி வசதியின் சிறப்பியல்புகள்**

- நிலையான வைப்பானது வைப்புச் செய்யப்பட்ட நாளின் அடுத்த நாளிலிருந்து கடன் தொகையானது, வழங்கப்படும்.
- இலகுவான மீளச்செலுத்தல் திட்டங்கள் – வாடிக்கையாளரின் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்ப வட்டி அல்லது அசல் தொகையை மீளச் செலுத்தும் வசதி உண்டு.
- குறைந்த ஆவணங்களுடன் குறைந்த சிரமம்.
- மிகவும் குறுகிய காலத்திற்குள் கடன் தொகை வழங்கப்படும்.

**2. வட்டி வீதம்** - நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி வீதத்தை விட 3.50% அதிகமான வட்டி வீதம்.

**3. சேவைக் கட்டணங்கள்** - ஒவ்வொரு வசதிக்கும் ரூபாய் 1,000/- ஆவணக் கட்டணமாக அறவிடப்படும்.

**4. முக்கிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்**

- காலாவதியாகும் நிலையான வைப்புத் தொகைகளுக்கு அதிகபட்சமாக வைப்புத் தொகையின் 80% வரை கடன் வழங்கப்படும் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது).*
- மாதாந்திர வட்டி பெறப்படும் நிலையான வைப்புத் தொகைகளுக்கு அதிகபட்சமாக வைப்புத் தொகையின் 75% வரை கடன் வழங்கப்படும் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது*).

**5. தேவையான ஆவணங்கள்**

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணப்பப் படிவம்
- ஈடுசெய்தல் இணக்க ஆவணம் (Set-off Document)
- மூல நிலையான வைப்புச் சான்றிதழ்

**Classification: MBSL Use Only**

## 6. சட்ட ஏற்பாடுகள்

இவ்வசதிக்கு பொருந்தும் சட்ட ஏற்பாடுகள்:

- ஒப்பந்தச் சட்டம்
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகள்

## 7. 2006 ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம்

- ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு எடுக்கும் முயற்சியானது, ஏதேனும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு அல்லது குற்றவியல் குற்றத்துடன் தொடர்புள்ளது என சந்தேகப்படுவதற்கு MBSL நிறுவனத்திற்கு நியாயமான காரணங்கள் இருப்பின், 2006ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 7ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஆடீளூடு இனால் அந்தக் கொடுக்கல்வாங்கல்கள் நிதிப் புலனாய்வு அலகிற்கு அறிக்கை செய்யப்படும்.
- அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள விதத்தில், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உரிய எல்லை மீறப்பட்ட (1 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்ட) கொடுக்கல்வாங்கல்கள், இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வு அலகிற்கு அறிக்கை செய்யப்படும்.

## 8. வாடிக்கையாளர்களது முறைப்பாடுகளைத் தீர்க்கும் நடைமுறைகள்

- வாடிக்கையாளர்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறையின் ஊடாகவும் மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா (MBSL) இற்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும்.
  - ✓ அனைத்து கிளைகளிலும் உள்ள முகாமையாளர் அல்லது இரண்டாவது உத்தியோகத்தரை அழைப்பை ஏற்படுத்துதல் அல்லது எழுத்துமூலமான முறைப்பாடுகளை முன்வைத்தல்.
  - ✓ எமது உடனடி அழைப்பு இலக்கத்திற்கு 0114 711 711 அழைத்தல்.
  - ✓ வாடிக்கையாளர் சேவைப் பிரிவிற்கு மின்னஞ்சலொன்றை அனுப்புதல். customercare@mbslbank.com
  - ✓ MBSL இன் முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தரை தொடர்புகொள்ளுதல் அல்லது அவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல். **(திரு. ருவன் பியதாச (பதிற்கடமை), 14 ஆம் மாடி, இலங்கை வங்கி மேர்சன்ட் கோபுரம், இலக்கம் 28, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03. கையடக்கத் தொலைபேசி இலக்கம்: 077-3219578).**

- மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளை பார்க்கவும்.
- திருப்திகரமான தீர்வொன்று வழங்கப்படாத சந்தர்ப்பத்தில், வாடிக்கையாளருக்கு தமது முறைப்பாடுகளை இலங்கை நிதி ஒம்புட்ஸ்மன் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கலாம்.

**நிதி ஒம்புட்ஸ்மன், நிதி ஒம்புட்ஸ்மன் அலுவலகம், இலக்கம் 143A வஜிர வீதி, கொழும்பு 05.**
**தொலைபேி இலக்கம் : ூ94 11 259 5624** | தொலைநகல் **(Telefax): +94 11 259 5625** |
மின்னஞ்சல் : **fosril@sltnet.lk** | **இணையத்தளம் : www.financialombudsman.lk**